22nd July 1957]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு பிராந்தியத்தில் அரிசி கிடைப்பது கஷ்டமாக இருந்தால் மற்ற செழிப்பான இடங்களிலிருந்து அரிசி எடுத்துச் செல்லக்கூடும். இருந்தாலும் அவசியம் ஏற்பட்டால் கடைகள் ஏற்படுத்துவது கவனிக்கப்படும்.

SRI V. K. KOTHANDARAMAN : சர்க்கார் அரிசியை "கோடௌனில்" வைத்துக் கொண்டிருப்பதனால் நாற்றம் ஏற்பட்டு மக்கி விடுகிறது. இதனால் நஷ்டம் ஏற்படுகிறது என்பதும் நமக்குத் தெரியும். ஆகையால் வரக்கூடிய அரிசியை நீண்ட நாள் வைத்துக்கொண்டிருக்காமல், உடனடியாக விநியோகம் செய்வதற்கு சர்க்கார் தக்க ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இவை உடனுக்குடன் கவனிக்கப்பட்டுத்தான் வருகிறது.

SRI P. M. MUNUSAMI GOUNDER : நியாயமான விலைக்கு நியாய விலைக் கடைகளில், சுலபமாகவும், நல்ல முறையிலும், அதிக அளவிலும் ஜனங்கள் அரிசி வாங்கிக்கொள்ள போதுமான அளவு அரிசி சப்ளை செய்யப்படுவதில்லை. ஆகையால் "சப்ளை கோட்டா"-வை அதிகப்படுத்த சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த நியாய விலை கடைகள் ஓரளவு நிவாரணம் அளிக்கும் வகையில்தான் ஏற்படுத்தப்பட்டன என்று நான் முன்பே பதிலில் சொன்னேன். ஆகையால் எங்கெங்கே வேண்டுமோ, எவ்வளவு வேண்டுமோ அங்கங்கே நியாயவிலைக் கடைகளை அதிகரித்துக்கொண்டுபோக முடியாது.

SRI K. SWAMINATHA MERKONDAR : தஞ்சாவூர் தாலூகாவில் செங்கிப்பட்டி, வல்லம் போன்ற வறண்ட தொகுதிகளில் ஏழை மக்கள் அதிக விலையில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். வெளியிலிருந்து அரிசி வாங்குவது மிகவும் சிரமமாக இருக்கிறது. ஆகையால் இந்த இடங்களில் நியாயவிலைக் கடைகளை ஏற்படுத்துமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப் பற்றி எல்லாம் கவனித்து அவசியம் ஏற்பட்டால் வேண்டிய ஏற்பாடுகளை செய்ய கலெக்டருக்கு அங்கிகாரம் இருக்கிறது.

Madras Cultivating Tenants' Act, 1956

* 184 *Q*.—SRI C. MUTHIAH PILLAI : Will the Hon. the Minister for Revenue be pleased to state the action taken on the representations from the Member from Sirkali Constituency regarding amendment of the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956, to extend its applicability to joint cultivators and tenants in Sirkali taluk and other areas in Tanjore district?

THE HON. SRI M. A. MANICKAVELU : In January 1957 a representation was received from hon. Member requesting the Government to amend the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956, so as to make it applicable to tenants under the " Karaivazhi " system of tenancy (joint cultivation). The representation was examined by the Government and the Member was informed that the question whether the tenants under the " Karaivazhi " system of tenancy will be governed by the provisions of the Fair Rent Act or not will have to be decided by the Rent Courts and the Rent Tribunals constituted under the Act.

[22nd July 1957

SRI C. MUTHIAH PILLAI : தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக் களிலே விவசாயிகள் இந்த மசோதாவினால் அதிக கஷ்டத்துக்குள்ளா கிறார்கள். இந்த மசோதாவிற்கு சில திருத்தங்கள் கொண்டுவந்தால் நலமாக இருக்கும். ஆகையினால் இந்த சட்டசபையிலேயே சர்க்கார் இந்த திருத்தங்கள் கொண்டுவருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

THE HON SRI M. A. MANICKAVELU : இந்தச் சட்ட சபையில் சீர்திருத்தங்கள் கொண்டுவரலாம். எந்த எந்த வகையிலே திருத்தம் செய்யவேண்டுமோ அதையெல்லாம் பரிசீலனை செய்து அதை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும்.

SRI C. MUTHIAH PILLAI : இது ரொம்பவும் முக்கியமான பிரச்னையாக இருக்கிற காரணத்தினாலே இதற்கு அரைமணி நேர விவாதம் ஒதுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். சட்டம் போட்டிருந்தும் விவசாயி கள் வெளியேற்றப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதுபற்றி பேபரிலும் செய்தி வந்திருக்கிறது. சம்பந்தப்பட்ட மந்திரிக்கும் முதல் மந்திரிக்கும் நன்றாகத் தெரியும். உடனடியாக அங்கே இந்தப் பிரச்னை தீர்க்கப்படா விட்டால் அமைதி குலைந்துவிடும் நிலையில் இருக்கிறது. ஆகையால் இதற்கு அரைமணி நேரம் விவாதம் ஒதுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : பட்ஜெட் விவாதம் செய்யும் நேரத்தில் அரை மணி நேர விவாதத்திற்கு அவகாசம் ஒதுக்க முடியாது. "அப்ரோபிரியே ஷன் பில்" லின்மீது விவாதம் நடக்கும்போது அங்கத்தினருக்கு இதுபற்றி பேச உரிமை இருக்கிறது. பேசலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

Simco Match Factory

* 185 Q.—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government are aware of the closure of the Simco Match Factory, Gudiyatham ; and

(b) whether the Government have taken any steps to re-open and run it again ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) No, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : இதுபோன்று தொழிற்சாலைக ளுடைய மூடுவிழாக்கள் தொடர்ந்து நடந்துகொண்டே போனால், வேலை யில்லா திண்டாட்டத்தை எப்படி நாம் போக்குவது, வேலையில்லாதவர் களுக்கு எப்படி வேலை கொடுப்பது ? ஆகவே புதிய தொழிற்சாலைகளை திறந்துகொண்டு போகக்கூடிய அதேநேரத்திலே பழைய தொழிற்சாலை கள் மூடிக்கொண்டே போகப்படுகிறது. இதற்கு தொழிலாளி காரணம் அல்ல....

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் கேள்வி நேரத்தின்போது பிரசங்கம் செய்யக்கூடாது. கேள்விதான் கேட்கலாம்.

SRI V. K. KOTHANDARAMAN : மூடப்பட்ட எல்லா தொழிற் சாலைகளையும் மீண்டும் திறந்து நடத்துவதற்கு சர்க்கார் முயற்சி எடுப் பார்களா ?

MR. SPEAKER : அது " கரெக்ட் ".

THE HON. SRI R. VENKATARAMAN : மூடுகின்ற தொழிற்சாலை கள் எல்லாவற்றையும் சர்க்கார் எடுத்து நடத்துவது என்ற கொள்கையை வரையறுத்துவிட்டால் எல்லோரும் தொழிற்சாலைகள் வைத்து மூடிக் கொண்டே போவார்கள். ஆகவே, எந்தெந்த தொழில்களை சக்கார்